INTERNATIONAL TRUTH AND JUSTICE PROJECT

W ITJPSL.COM
E ITJPSL@GMAIL.COM

EXECUTIVE DIRECTOR:
YASMIN SOOKA

ஊடக வெளியீடு :

**இறந்தவர்கள் தொடர்பில் துக்கம் அனுஷ்டிப்பதற்கு தடையுத்தரவு**

**2017 மே 17**

**யோஹான்ஸ்பர்க்** : முள்ளிவாய்க்காலில் இறந்தவர்கள் தொடர்பில் தமிழ் குடும்பத்தினர் நடத்த இருந்த நினைவு கூறும் நிகழ்வுகளை இலங்கை அரசு அண்மையில் தடை செய்ததை உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயட்திட்டம் கண்டிப்பதுடன் உடனடியாக குறித்த தடை உத்தரவை நீக்கும் படி அரசிடம் வேண்டிநிற்கிறது.

முல்லைத்தீவு நீதவான், மாவடடநீதிபதியினாலும் தமிழில் பிறப்பிக்கப்பட்ட நீதிமன்ற கட்டளைக்கமைய முள்ளிவாய்க்கால் கிழக்கில் உள்ள கத்தோலிக்க தேவாலயத்திற்கருகில் நடாத்தப்படயிருந்த சகல சடங்குகழும் இன்று மாலையிலிருந்து 14 நாட்களுக்கு தடைசெய்ய பட்டுள்ளது. இத்தடைக்கு "மக்களின் அமைதிக்கும் தேசத்தின் பாதுகாப்பிற்கும் நாட்டின் கூ றுபடா நிலைக்கும்" பாரிய பாதகம் ஏற்படும் என்ற அடிப்படையிலேயே இக்கட்டளை பிறப்பிக்கப்பட்டுள்ளது ,

"*இறந்தவர்களை ஞாபகப்படுத்துதல் ஒவ்வொரு மக்களினதும் கலாச்சாரத்திலும் ஒரு அடிப்படை உரிமையாக உள்ளது. அப்படியிருக்கையில் தா ங்கள் நேசித்தவர்களை ஞாபகப்படுத்தி கண்ணீர் மல்க அழும் பெற்றோர் எப்படி ஒரு தேசத்தின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைவர் என்ற கேள்வி எழுகின்றது." என உண்மைக்கும் நீதிக்குமான சர்வதேச செயட்திட்டதின் நிறைவேற்று பணிப்பாளராகிய யஸ்மின் சூகா அம்மையார் வினவுகிறார்.*

"*இவ்வகையில் தேசிய பாதுகாப்பை அடிப்படை யாக கூறி குறித்த தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவது ஒரு போலியான காரணமாகும். இத்தீவின் வடக்கிலும் கிழக்கிலும் இருக்கும் தமிழ் சமூகத்தினரை பாதிக்கும் வகையில் தொடர்ந்து வரும் இராணுவ மயமாக்கலினதும் அடக்குமுறையினதும் குறியீடாக உள்ளது. முழுத்தேசத்திலும் உள்ள மனி தயுரி மை ஆர்வலர்கள்*

*இவ்வகையிலான மூர்க்கத்தனமான செயலுக்கு எதிர்ப்பு தெரிவித்து நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும்*."

2009 மே மாதத்தில் இலங்கை இராணுவம் இறுதியில் கைப்பற்றிய இடம் முள்ளிவாய்க்கால் ஆகும். அவ்வூரில் உள்ள குடும்பத்தினர் முதியோர் குழந்தைகள் உட்பட, இறந்தவர்கலின் பெயர்களை நினைவுக்கற்களில் பொறிக்க இவ்வருடம் . நடவடிக்கை எடுக்க ஆரம்பித்துள்ளனர். அக்கற்களை முள்ளிவாய்க்காலில் உள்ள புனித போல் தேவாலயத்திற்கு அருகிலுள்ள வெளியில் யுத்தம் முடிவடைந்த தினத்தை ஒட்டி நடைபெறவிருந்த நிகழ்வின் பொழுது பதிக்க திடடமிட்டு இருந்தனர். ஆனால் அவ்வாறு செய்வது தற்சமயம் தடைசெய்யப்பட்டுள்ளது. அண்மைய நாட்களில் அக்கிராமத்தினர் பொலீசாரின் அப்பட்டமான அச்சுறுத்தலுக்கு முகம் கொடுக்க நேர்ந்தது. மே 18-ம் திகதிக்கு எவ்வகையான நிகழ்ச்சிகளை நடாத்த திட்டமிட்டுள்ளார் கள் என்பது பற்றிய தகவல்களை கோரி குற்றவியல் புலனாய்வு திணைக்கள அலுவலர்களிடம் இருந்து குறித்த கிராமத்தில் உள்ளவர்களுக்கு தொலைபேசி அழைப்புகள் பல வந்துள்ளன. இவற்றிக்கு மேலதிகமாக ஞாபமூட்டல் நடைபெற இருந்தான் வெளியிற்கு வெளியே ஒரு டிரக் வண்டியும் சீர் உடை அணிந்த போலீசார் மூவரும் நிறுத்த பட்டுள்ளனர். நினைவூட்டல் கற்களில் பெயர்களை பொறி ப்பவரை செவ்வாய் கிழமையன்று போலீஸ் நிலயத்திற்கு அழைத்து அவரது வாக்குமூலம் பதியப்பட்டதுடன் எவர் எவருடைய பெயர்கள் பொறிக்கப்பட இருந்தது என்ற பட்டியலை தம்மிடம் கொடுக்கும் படி கேட்கபட்டரர். .

"*துக்கம் அனுஷ்டிக்கும் உரிமையானது மனித்தன்மையுடன் ஒருங்கி ணைந்த ஒரு விடயமாகும். அத்துடன் நினைவு சின்னம் அமைத்தல் என்பது இலங்கை அரசாங்கம் நிலைமாறும் தறு வாயிலுள்ள நீதிக்கான நிகழ்ச்சியில் மையப்பொருளாக கருதப்பட்டு இணங்கிக்கொண்டு இதுவரையில் செய்ய தவறிய ஒரு விடயமாகும்*" என திருமதி சூகா அம்மையார் கூறுகின்றார்.

2009 மே மாதம் 18-ம் திகதி இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் பெயர்களை வெளிப்படுத்துமாறு **ITJP** இலங்கை அரசை கோரிநிற்கி ன்றது. அத்துடன் அவர்களுள் யார் யார் உயிருடன் உள்ளார்கள், யார் யார் இறந்து விடடனர் என்பதை உறுதிப்படுத்தும் படி கோருகின்றது. அவர்களுள் எவரேனும் உயிருடன் தடுத்து வைக்கப்பட்டிருப்பின் அவர்களுக் கெதிராக குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட வேண்டும் அல்லது விடுவிக்கவேண்டும். தாம் நேசித்தவர்களுக்கு என்ன நடந்தது என்ற தகவலை கோரி தமிழ் குடும்பங்கள் கடந்த பல மாதங்களாக ஆர்ப்பாட்டம் செய்து வந்துள்ளனர் .

"*காணாமல் போனவரின் தாய்மார் மாதக்கணக்கில் வீதி ஓரங்களிலிருந்து ஆர்ப்பாட்டம் செய்து அரசினதும் சர்வதேசத்தினதும் கவனத்தை ஈர்க முயன்றது பலனளிக்கவில்லை. அவர்களை கனம்பண்ணி அவர் களின் கோரிக்கை களுக்கு மதிப்பளிக்காது நடந்து கொண்டமை வெட்கப்பட வேண்டிய ஒரு விடயமாகும். அவர்களின் கோரிக்கைகளுக்கு பதில் வழங்க வேண்டும்*" என திருமதி சூகா கூறியுள்ளார் .

பாரிய மனித உரிமை மீறல்களுக்கு உள்ளாக்கியவர்கள் எவ்வகையான சூழலில் அவ்வாறு ஆக்கப்பட்டார் எனவும் அதற்கு யார் பொறுப்பு

என்பதையும் தெரிந்து கொள்ளும் உரிமை அவர்களுக்கு உள்ளது என்பது சர்வ தேச சட்டத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ள ஒரு விடயமாகும்.

INTERNATIONAL
TRUTH
AND JUSTICE
PROJECT